மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# புகலிடத் தமிழ்ச் சிற்றிதழ்கள் ஓர் அறிமுகம்

முனைவர். இரா. செங்கொடி
உதவிப்பேராசிரியர்
சர். தியாகராயர் கல்லூரி, சென்னை

**சிற்றிதழ் தோற்றத்திற்கான காரணங்கள்**

போரினால் புலம் பெயர்ந்து வந்த தமிழர்களுக்குப் புதிய நாட்டின் காலநிலை, பண்பாடு, சட்டத்திட்டங்கள் மிகப் பெரிய அதிர்வை ஏற்படுத்தின. இந்நிலையில் அவர்கள் பண்பாட்டு உளவியல் சார்பான பல்வேறு சிக்கல்களைப் புகலிடத்தில் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அந்நியப்பட்டு வாழும் அகதி வாழ்வின் எண்ணங்களைப் பேசவும், தமது உணர்வுகளை உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு எடுத்துச் சொல்லவும், வெளிப்படுத்தவும் அவர்களுக்கு ஓர் ஊடகம் தேவைப்பட்டது. ஈழத்தமிழர்களின் உணர்வுகளை உலகெங்கும் எடுத்துச் செல்லும் வாகனமாகப் புலம்பெயர் சிற்றிதழ்கள் செயல்பட்டன. உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களை இனங்காட்டவும், பதிவு செய்யவும் புகலிடத் தமிழ்ச் சிற்றிதழ்கள் மேற்கொண்ட முயற்சிகளை ஆவணப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**புலம்பெயர் சிற்றிதழ் வரலாறு**

1980களின் தொடக்கம் முதற்கொண்டே ஈழத்தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர். அவ்வாறாகப் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் அகதிகளில் பெரும்பாலோர் தமிழ் மொழியை மட்டுமே தெரிந்தவர்களாக, வேற்று மொழியை அறியாதவர்களாக காணப்பட்டனர். பிறமொழிச் சூழலில் வாழ நேர்கையில் தமது அடையாளத்தை, பண்பாட்டைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இத்தகு சூழலில் தமிழில் சிற்றிதழ் வெளியிடும் வாய்ப்பினை உருவாக்கிக் கொண்டனர். எனவே தான் புகலிடத் தமிழர்கள் மத்தியில் 80களின் தொடக்கம் முதற்கொண்டு 90கள்

வரையிலான பத்தாண்டுகளில் எண்ணற்ற சிற்றிதழ்கள் தோற்றம் பெற்றன. கிட்டத்தட்ட 150க்கும் மேற்பட்ட சிற்றிதழ்கள் புகலிடச் சூழலில் இருந்து வெளியாகி உள்ளதாக குணேஸ்வரன் புகலிட சஞ்சிகைகள் குறித்த தமது கட்டுரையில் குறிப்பிடுகின்றார். புலம்பெயர் சிற்றிதழ்கள் தனிமனித முயற்சியால் மட்டுமே வெளிவரவில்லை. கலை இலக்கியக் குழுக்களின் வெளியீடாகவும், புகலிடத்தின் வெவ்வேறு நாடுகளில் வாழும், அதே நேரத்தில் ஒத்த கருத்துடையவர்களாலும், இலக்கிய அமைப்புகளாலும் எழுத்தார்வம் கொண்ட இலக்கிய நண்பர்களின் கூட்டு முயற்சியினாலும் வெளிவருகின்றன. இவ்வாறாகப் புகலிட நாடுகளிலிருந்து சிற்றிதழ்களைக் கொண்டு வரும் குழுக்களாக கனடாவில் இயங்கும் காலம் இலக்கியக் குழு, பிரான்சில் இயங்கும் எக்ஸில் வெளியீடு, இங்கிலாந்தில் இயங்கும் தமிழ் மக்கள் கலாச்சாரக் குழு, ஜெர்மனியில் இயங்கும் தூண்டில் பதிப்பகம், நார்வேயில் இயங்கும் சுவடுகள் பதிப்பகம்,தமிழர் நலன்புரி சங்கம், தேடல் பதிப்பகம் முதலானவற்றை உதாரணமாகச் சொல்லலாம். இவ்விதழ்கள் காலாண்டு, அரையாண்டு, மாத இதழ்களாகவும் வெளிவந்துள்ளன. இலக்கியம், அரசியல்,கலை, பெண்ணியம், எதிர்ப்பிலக்கியம், தலித்தியம், குறும்படம் ஆகிய உள்ளடக்கங்களைப் பெற்று மாற்றுக் கருத்திற்கான தளமாக விளங்கின.

**புகலிடச் சிற்றிதழ்களில் மைல்கல்**

1985 ஆம் ஆண்டு ஜெர்மனியில் இருந்து வெளிவந்த தூண்டில் சிற்றிதழே புகலிடத்தில் இருந்து வெளிவந்த முதல் சிற்றிதழாகக் கருதப்படுகிறது. இவ்விதழின் வழியாக தான் ஜெர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் பார்த்திபனின் தொடக்ககால நாவல்கள் தொடராக வெளிவந்துள்ளன. புகலிடச் சிற்றிதழ்களில் ஆக்கப்பூர்வமான செய்திகளைத் தாங்கி முதன்மையானதாக வெளிவந்த சிற்றிதழ்களைக் குறிப்பிட்டுச் சொல்வது பயன் தரும்.

பிரான்சில் இருந்து 1990ஆம் ஆண்டு வெளிவந்த சிற்றிதழ் உயிர்நிழல் கலைச்செல்வனை ஆசிரியராகக்கொண்டு இருமாத இதழாக வெளிவந்தது. கலைச்செல்வனின் மறைவுக்குப் பின்னர் லஸ்மியின் பங்களிப்போடு மீண்டும் வெளிவந்தது. புலம்பெயர்ந்த ஈழத்துப் படைப்பாளிகளின் எழுத்துக்களுக்கும், கருத்துக்களுக்கும் தளம் அமைத்துக் கொடுத்தது. பிரான்சில் இருந்து வெளிவந்த மற்றொரு முக்கியமான சிற்றிதழ் எக்ஸில். இச்சிற்றிதழ் எகஸில் வெளியீட்டகத்தின் வாயிலாக வெளிவந்தது. தற்போது இவ்விதழ் நின்றுவிட்டது. எக்ஸில் வெனியீட்டகத்தின் ஊடாகப் புகலிடத்தமிழ்ப் படைப்பாளிகளில் முக்கியமானவர்களாகக் கருதப்பட்ட கலாமோகன், திருமாவளவன், சக்கரவர்த்தரி ஆகியோரின் நூல்கள் வெளிவந்துள்ளன.

உயிர் நிழல், எக்ஸில் ஆகிய இரண்டு சிற்றிதழ்களுமே எதிர்ப்பிலக்கியம், பின்நவீனத்துவம், பெண்ணியம் ஆகிய கருத்தமைந்த எழுத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தன. பிரன்சிலிருந்து வெளிவந்த மற்றொரு சிற்றிதழ் அம்மா. சிறுகதைகளுக்கென்று தனித்ததொரு இதழாக இவ்விதழ் வெளியானது. காலம் 1990 இல் கனடாவில் இருந்து இன்றுவரை வெளியாகும் ஒரே இதழாகும். இவ்விதழின் ஆசிரியர்

செல்வம். இச்சிற்றிதழ்களில் தமிழகப் படைப்பாளிகளின் ஆக்கங்களே அதிகமாக வருவதால் தமிழ்நாட்டின் காலச்சுவட்டை தழுவிய இதழாக வருவதாக விமர்சனம் உண்டு. இக்குறையை நீக்கிப் புகலிடப் படைப்புகளையும், ஈழத்துப் படைப்புகளையும் தாங்கி வருவதே காலம் இதழ் வளர்ச்சிக்கு உதவும். இச்சிற்றிதழின் ஆசிரியர் செல்வம் வாழும் தமிழ் என்ற நூல் கண்காட்சியை வருடம் தோறும் நடத்தி வந்தார்.

எழுத்தாளர் க.நவம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கனடாவில் இருந்து வெளியான மற்றொரு கலை இலக்கியச் சிற்றிதழ் நான்காவது பரிமாணம் ஆகும். 1991 செப்டம்பர் முதல் 1994 ஏப்ரல் வரையிலும் 13 இதழ்கள் மட்டுமே வெளிவந்து நின்றுபோனது. கனடாத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்த சிற்றிதழ்களுள் ழகரம் சிற்றிதழுக்கு முக்கியமான இடம் உண்டு. 1997இல் தொடங்கப்பட்ட இவ்விதழ் நான்கு இதழ்கள் மட்டுமே வெளிவந்திருந்தாலும் தவிர்க்க முடியாத சிற்றிதழாகக் கருதப்படுகிறது. இவ்விதழின் ஆசிரியர் அ.கந்தசாமி.

கனடாவில் இருந்து வெளிவரும் வேறுசில குறிப்பிடத் தகுந்த சிற்றிதழ்களாக குவியம், அற்றம், கைநாட்டு, பறை, தாயகம் முதலானவற்றைக் குறிப்பிடலாம். ஆஸ்திரோலியாவில் இருந்து வெளியானவற்றில் விமல் அரவிந்தனின் மரபு, யாழ் பாஸ்கரனின் அக்னிக்குஞ்சு ஆகிய சிற்றிதழ்களைக் குறிப்பிடலாம்.

1989 ஆம் ஆண்டு முதல் நெதர்லாந்தில் இருந்து வெளிவந்த அஆஇ சிற்றிதழ் அரசியல் மற்றும் இலக்கிய இதழாக இருமாதத்திற்கொருமுறை வெளியானது. இவ்விதழின் முதல் ஆறு இதழ்களும் கையொழுத்து வடிவில் வெளிவந்து பின்னர் அச்சு வடிவில் உருப்பெற்றது. அஆஇ புகலிடச் சிறுகதைகளுக்கென்றே சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது. சிங்களப் பேரினவாத அரசால் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எடுத்துரைக்கும் இயக்க அரசியல் சார்புடைய இதழ்களாக எரிமலை, சமர், புதுமை, தாயகம் முதலான சிற்றிதழ்கள் வெளிவந்தன.

"சமர்" சிற்றிதழ் பிரான்சிலிருந்து தத்துவார்த்த சிற்றிதழாக வெளிவந்தது. இவ்விதழில் கவிதை, சிறுகதை போன்ற இலக்கிய வடிவங்கள் எதுவும் பிரசரிக்கப்படவில்லை. அரசியல் விமர்சனக் கட்டுரைகளே வெளிவந்துள்ளன. இவ்விதழ்கள் இணையத்தில் பார்க்கக் கிடைக்கின்றன.

"எரிமலை" சிற்றிதழ் ஈழவிடுதலைப் போராட்டம் பற்றியும், போராளிகள் குறித்தும் பேசுகின்ற தீவிர ஈழ அரசியல் இதழாக இன்றுவரை இணையத்தில் வெளிவருகின்றது.

புகலிடச் சிற்றிதழ் பெண்களின் பிரச்சினைகளைப் பேசவும், புகலிட வாழ்வில் நிகழ்த்தப்படும் பெண்கள் மீதான வன்முறைகளை எழுத்தில் எடுத்துரைக்கவும் புகலிடச் சிற்றிதழ்கள் உறுதுணையாக உள்ளன. புகலிடத்திலிருந்து வெளியான தொடக்கக்கால இதழ்களில் ஆண்களால் எழுதப்படும் எழுத்துக்களில் ஆணாதிக்கக் கருத்துகள் மேலோங்கி இருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. எனவே பெண்ணிய எழுத்துக்கள் பெண்களிடம் இருந்தே வெளிவர வேண்டும் என்னும் கருத்துநிலை உருவானது. அதனடிப்படையில் கண், ஊதா, சக்திஈ, ஊறு ஆகிய சிற்றிதழ்கள் பெண்களால்

வெளிவந்தன. 1986ஆம் ஆண்டு முதற்கொண்டு வெளியான "கண்" சிற்றிதழ் பெண்கள் தொடர்பான பல்வேறு கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தது. பெண் ஒடுக்குமுறை, பெண் விடுதலை கருத்துக்களை முன்வைத்து இவ்விதழ் படைப்புகளை வெளியிட்டது.

"அற்றம்" பெண்ணிய இதழ் 2005 ஆம் ஆண்டு முதல் தாண்யா, பிரதீபா, தில்லைநாதன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு, கனடாவில் இருந்து வெளியானது. எழுத்தார்வம் மிக்க பெண்களின் ஆக்கங்களுக்கு இவ்விதழ் களம் அமைத்துக் கொடுத்தது.

"சக்தி" இதழ் நார்வே நாட்டிலிருந்து 1990ஆம் ஆண்டு முதல் மைத்ரேயி உள்ளிட்ட பெண்களின் முயற்சியால் கொண்டுவரப்பட்டது. இவ்விதழில் ஆண்களின் படைப்புகள் இடம்பெற்றிருந்தாலும் பெண்களின் ஆக்கங்கள் போதுமானதாக இருக்கும் நிலையில் ஆண்களின் படைப்புகள் பிரசுரிக்கப்படமாட்டாது என ஆசிரியர் குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்ணிய கருத்துக்களை மையப்படுத்தி ஜெர்மனியிலிருந்து வெளிவரும் இதழ் "ஊடறு", "அதிகார வெளியினை ஊடறுக்கும் பெண்குரல்" என்னும் வாசகத்தை மகுடமாக்கிக் கொண்டு இவ்விதழ் வெளிவருகிறது. இச்சிற்றிதழில் உலகமெங்கும் புலம்பெயர்ந்து வாழும் பெண்களின் படைப்புகளை ஒருங்கே காண முடிகிறது. ஜெர்மனியில் வாழும் றஞ்சி, தேவா ஆகியோரின் கூட்டு முயற்சியால் இச்சிற்றிதழ் கொண்டுவரப்பட்டது. இவ்விதழ் மின்னூல் வடிவில் இணையத்தில் காணக் கிடைக்கிறது.

## புகலிடச் சிற்றிதழ்களின் அமைப்பு

தொடக்கக்காலச் சிற்றிதழ்கள் பலவும் கையெழுத்து வடிவில் எழுதப்பட்டு, பிரதியெடுக்கப்பட்டு இதழ்களாக வெளிவந்தன. பின்னர் தட்டச்சு செய்யப்பட்டு நகலாக எடுத்து வெளியிடப்பட்டன. இதுமட்டுமல்லாது ஏற்கனவே அச்சில் வெளிவந்த படைப்புகளை வெட்டி எடுத்து ஒரே அளவில் படியெடுத்தும் இதழ்களாகக் கொணர்ந்தனர். தூண்டில், இரவல் போன்ற சிற்றிதழ்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். கையெழுத்துப் பிரதிகளாக வெளிவந்த சிற்றிதழ்களுக்கு அஆஇ, அம்மா, சக்தி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

1990களுக்குப் பிறகே புகலிடச் சிற்றிதழ்கள் அச்சு வடிவம் பெறத்தொடங்கின. தூண்டில், இரவல் போன்ற சிற்றிதழ்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். கையெழுத்துப் பிரதிகளாக வெளிவந்த சிற்றிதழ்களுக்கு அஆஇ, அம்மா, சக்தி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

1990களுக்குப் பிறகே புகலிடச் சிற்றிதழ்கள் அச்சு வடிவம் பெறத்தொடங்கின. இதற்குப் பின்னர் வரத்தொடங்கிய இதழ்கள் அனைத்துமே கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு வெளியாயின. 200செ.மீ 15செ.மீ அளவுகளில் புகலிடத்தில் தொடக்கக்காலச் சிற்றிதழ்களின் கட்டமைப்பு வடிவம் அமைந்திருந்தது.

**புகலிடச் சிற்றிதழ்கள் உள்ளடக்கம்**

புகலடத்தில் இருந்து வெளிவந்த சிற்றிதழ்களின் தன்மைகளை நோக்கும்போது பெரும்பான்மையான சிற்றிதழ்கள் மாற்றுக்கருத்துக்களுக்கான தளமாக விளங்கின. சமூகமாற்றம், போர், போரினால் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறை, அடக்குமுறை, மனித உரிமை மீறல், ஜனநாயக உரிமை ஆகிய கருத்துக்களை மையமாகக்கொண்ட படைப்புகளும், மூன்றாம் உலக நாடுகள் மீதான அடக்குமுறையை வெளிப்படுத்துதல், தீவிர பெண்ணியம், தலித்தியதத்தியம், எதிர்ப்பிலக்கியம், பின்நவீனத்துவம் உள்ளிட்ட உள்ளடக்கங்களைக் கொண்டிருந்தன.

புகலிடச் சிற்றிதழ்கள் கொண்டிருந்த பொருட்பரப்பைப் பின்வரும் வகைப்பாட்டில் அடக்கிப் பார்க்கலாம்.

1. தாய் மண்ணை விட்டுப் பிரிந்து வந்த நினைவுகளை வெளிப்படுத்துதல்
2. புலம்பெயர் வாழ்வின் புதிய சூழல் தரும் அனுபவங்களைப் படைப்புகளில் வெளிக் கொணர்தல்.
3. போர், போரினால் நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல்கள்
4. இந்திய படைகள் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தியவன்முறை
5. தமிழப் போராளி குழுக்களை விமர்ச்சித்தல்
6. புகலிட வாழ்வில் தமிழ்ப்பண்பாட்டில் ஏற்படுத்திய அதிர்வுகள்
7. தாயகத்திலும், புகலிடத்திலும் காணப்படும் சாதிய மேலாதிக்கம்
8. அகதிகள் மீது காட்டப்படும் நிறவெறி வெறுப்புணர்வு
9. புகலிட வாழ்வில் பெண்களின் நிலை

**புகலிடச் சிற்றிதழ்களின் தேக்க நிலைக்குக் காரணம்**

பெரும்பாலான சிற்றிதழ்கள் தம் கொள்கைகளைப் பரப்பும் சாதனமாகவே செயல்படுகின்றன. பொருளாதார ஆதரவின்மை, இதழ்களில் வெளிவரும் விளம்பர வருமானத்தை நம்பியே சில சிற்றிதழ்கள் வெளிவருகின்றன. எனவே சிற்றிதழில் பெரும்பாலான பக்கங்களை விளம்பரங்களே ஆக்கிரமிக்கின்றன. இதனால் இதழ்களின் சுயத்தன்மையை இழக்கின்றன. பலரும் இதழ் வாங்கி படிக்க முன்வருவதில்லை. இலவசமாக விநியோகிக்கப்படும் இதழ்களுக்கு மதிப்பில்லாமல் போய்விடுகிறது. தமிழக - இந்தியப் படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுவதாக குறைப்படுவோருண்டு. காலம் போன்ற சிற்றிதழ்கள் தமிழகப் படைப்பாளிகளின் ஆக்கங்களைத் தாங்கி தமிழ்நாட்டுச் சிற்றிதழைப் போலவே வெளிவருவதைக் காணலாம்.

புகலிட வாழ்வில் வாரத்தில் ஒரு நாள் மட்டுமே விடுமுறை கிடைக்கிறது. அதிலும் தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்கள் வீடு திரும்பவே மாலை ஆறு மணிக்கும் மேலாகிவிடுகிறது. தற்போதைய நிலையில் புகலிடத்திலிருந்து பத்துக்கும் குறைவான சிற்றிதழ்களே வெளிவருவதாகவே அறிய முடிகிறது. காலம், காற்றுவெளி, குவியம், மண், எதுவரை போன்ற சிற்றிதழ்கள் மட்டுமே வெளிவந்து கொண்டிருக்கின்றன.

**புகலிடச் சிற்றிதழ்கள் படைப்பாளிகள்**

"காலம்" சிற்றிதழை வளமாக்கிய குமார்மூர்த்தி சிறந்த சிறுகதை ஆசிரியரும் ஆவார். கி.பி.அரவிந்தன் பாலம், பனிமலர், ஓசை ஆகிய சிற்றிதழ்கள் எழுது அதன் வழியாக இலக்கிய உலகில் நன்கறியப்பட்டவர். நட்சத்திர செவ்விந்தியன் புலம், எக்ஸில், உயிர்நிழல் என பல்வேறு சிற்றிதழ்களிலும் எழுதியவர். இவர் படைப்பாளியாக மட்டுமல்லாது, இலக்கிய விமர்சகராகவும் அறியப்படுகிறார். பத்மநாப ஐயரால் வெளிக்கொண்டுவரப்பட்ட இன்னுமொரு காலடி போன்ற பல தொகுப்புகளிலும் இவரது படைப்புகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரைப் போலவே கவிஞர் இளவாலை விஜயேந்திரன் ஓசை, மௌனம், அஆஇ, பனிமலர், மரபு, சக்தி ஆகிய சிற்றிதழ்களின் வழியே நன்கறியப்பட்டவர். இவருடைய படைப்புகளும் பத்மநாப ஐயரின் பல்வேறு தொகுப்புகளிலும் வெளிவந்துள்ளன. இவருடைய தொடக்கக்கால படைப்புகள் பல ஈழத்தில் இருந்து வெளிவந்த "சரிநிகர்" இதழிலும் வெளிவந்துள்ளது. இவர்களைப் போலவே ஆழியாளும் குறிப்பிடத் தகுந்த கவிஞர் ஆவார். இவருடைய கவிதைகளும் புகலிட நாடுகளில் இருந்து வெளியாகும் தொகுப்புகள் பலவற்றிலும் வெளிவந்துள்ளன. இவர் "உயிர்நிழல்" போன்ற சிற்றிதழ்களில் தமது படைப்பாற்றலை வெளிப்படுத்தினார்.

கனடாவில் இருந்து கொண்டு எழுதியவர்களில் முக்கியமானவர்களாக பிரதீபா தில்லைநாதன், சியாம் செல்லத்துரை ஆகிய இருவரையும் குறிப்பிடலாம். இதிலே பிரதீபா தில்லைநாதன் கவிதை, சிறுகதை எனத் தமது படைப்பாளுமையை வெளிப்படுத்தியவர் ஆவார். உயிர்நிழல், காலம் முதலான சிற்றிதழ்களில் இவருடைய படைப்புகள் வெளியாகியுள்ளன.

சக்கரவர்த்தி, நான்காவது பரிமாணம், காலம், எக்ஸில், மூகரம் ஆகிய சிற்றிதழ்களில் தன் சிறுகதை, கவிதைகளை வெளிக்கொணர்ந்தவர். புகலிடத் தமிழர்கள் மத்தியில் இருந்து வெளிவந்த குறிப்பிடத்தகுந்த சிறுகதை தொகுப்பு நூலான பனியும் பனியிலும் இவருடைய சிறுகதை வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதைப்போலவே திருமாவளவன் தாயகம்,மூகரம், எக்ஸில் ஆகிய சிற்றிதழ்களிலும் இனியும் சூழ்கொள் தொகுப்பிலும் எழுதியவர். புகலிட நாடுகளில் இருந்து வெளிவந்த சிற்றிதழ்களில் புகலிடப் படைப்பாளிகளின் ஆக்கங்கள் மட்டுமே வெளிவந்தன என்று சொல்ல முடியாது. ஈழத்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த படைப்பாளிகளும் எழுதியுள்ளனர். கா.சிவதம்பி, சித்திரலேகா மௌனகுரு, சு.விலவரத்தினம், சாந்தன், மு.பொன்னம்பலம் என இவர்களின் பட்டியல் நீண்டு செல்கிறது.

**முடிவு**

எண்பதுகளில் தோற்றம் பெற்ற புகலிடச் சிற்றிதழ்களில் இன்று பெரும்பான்மையானவை பிரசுரமாகவில்லை. புகலிடச் சிற்றிதழ்கள் வரலாற்றில் தடம் பதித்த சிற்றிதழ்கள் பல. அவை ஈழத்தமிழர்களின் உணர்வுகளை உலக அளவில் கொண்டு செல்லும் ஊடகமாகவும், வரலாற்று ஆவணமாகவும் செயல்பட்டுள்ளன.